நில அளவைத் திணைக்களம்

நில அளவைப் புல உதவியாளர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2024, கார்த்திகை

2024.11.23 நேரம்: இரண்டு மணித்தியாலங்கள் 09 00 – 11 00

அறிவுறுத்தல்கள்:

பரீட்சை இலக்கம்:

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. அதற்காக நில அளவைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் விடைத்தாள்களை பயன்படுத்தவும்.

1.

I. நிலஅளவைப் புல உதவியாளர்களை கொண்ட குழு ஒன்று இடவசதிப்படியைப் பெற உரித்துடையவர்கள். அவ்வாறான குழு ஒன்றில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த நிலஅளவைப் புல உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனை? (2 புள்ளிகள்)

II. ஓர் உத்தியோகத்தருக்குக் கொடுக்கப்படும் இணைந்த படித்தொகை, இரண்டு காரணங்களுக்கு ஏற்ப வேறுபடும். அந்த இரண்டு காரணங்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. அரச கருமப்பயணங்கள் பேருந்தில் (பஸ்ஸில்) செய்யப்படும் போது, பஸ் கட்டணத்தைக் கோருவதற்கு தொடர்புடைய பற்றுச்சீட்டுக்கள் தேவையில்லை. ஆனால் கோரிக்கையைத் தயாரிப்பவர் சான்று ஒன்றை அக்கோரிக்கையில் கொடுத்தல் வேண்டும். அந்த சான்றை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

IV. "ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டுகள் என்றால் போய்த் திரும்பி வரும் பயணத்துக்கான இரண்டு தனியான ஆணைச்சீட்டுகள் ஆகும். நிரந்தர நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர் ஒருவர் ஒரு வருடத்திற்கு இவ்வாறான மூன்று சோடி புகையிரத ஆணைச் சீட்டுகளுக்கு உரித்துடையவர். அதனை அவர் 06 வெளிச்செல்லும் அல்லது உள்வரும் தனித்தனி பயணத்துக்காகப் பெற்றுக்கொள்ள முடியும்". மேற்கூறிய கூற்றில் உள்ள சரியான மற்றும் பிழையான தகவல்களை தனித்தனியாக குறிப்பிடவும. (6 புள்ளிகள்)

V. நிரந்தர நியமனம் பெற்ற நிலஅளவைப் புல உதவியாளர் ஒருவர் கடமை புகையிரத ஆணைச்சீட்டு ஒன்றுக்காக விண்ணப்பிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள இரண்டை (02) குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

2. இயந்திரவியல் அளவை ஒன்றை செய்து படம் ஒன்றை தயாரிப்பதற்கு நிலஅளவை வேண்டுகோள் ஒன்று கிடைத்திருப்பதாகவும் அதை பூரணமானி கொண்டு செய்ய இருப்பதாகவும் உங்களுடைய நிலஅளவையாளர் மூலமாக உமக்கு அறியக்கிடைத்தது.

I. சாதாரண நிலஅளவைக்கும் இயந்திரவியல் அளவைக்கும் இடையிலான பிரதான வேறுபாடு யாது? (6 புள்ளிகள்)

II. சாதாரண நிலஅளவைக்காக பாவிக்கப்படும் உபகரணங்களுக்கு மேலதிகமாக இயந்திரவியல் அளவையில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் இரண்டைக்(02) குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. அவ்வாறான உபகரணங்களை பாவித்து பெறப்படும் தகவல்கள் யாவை? (2 புள்ளிகள்)

IV. உங்களுடைய நிலஅளவையாளர் செய்யும் வேறு இரண்டு (02) வகையான நிலஅளவைகளை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

V. புலத்தில் எல்லைக்கற்கள் இடும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

3.

I. புலத்தில் புதிதாக புவிப்பார்த்தல் பாலனப்புள்ளி ஒன்றை நிறுவும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய ஐந்து (05) காரணிகளைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

II. பட அளவிடை என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

III. நிலஅளவைக்காக பயன்படுத்தப்படும் முளை வகைகள் நான்கினை (04) குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

4.

I. "விடுமுறை என்பது அரச ஊழியர்களின் உரிமையாகும்". இக்கூற்று சரியானதா, பிழையானதா? உமது பதிலை விளக்குக. (4 புள்ளிகள்)

II. "இந்த நாட்டில் கழிப்பதற்கான விடுமுறை கோரிக்கைகளுக்காக பொது 125 "அ" பாவிக்க வேண்டும்". இக்கூற்று சரியானதா, பிழையானதா? உமது பதிலை விளக்குக. (4 புள்ளிகள்)

III. "ஒவ்வொரு வருடத்திலும் சேமிக்கப்படும் சமயாசமய விடுமுறைகளை தமது சேவைக்காலத்துடன் முன்னெடுத்து செல்ல முடியும்". இக்கூற்றை விளக்குக. (4 புள்ளிகள்)

IV. நிரந்தர, தற்காலிய, சமயாசமய மற்றும் பயிலுனர் நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் மகப்பேற்று விடுமுறைக்கு உரித்தானவாகள். இந்த மகப்பேற்று விடுமுறையை 03 படிகளின் கீழ் பெறலாம். அந்த 03 படிமுறைகளையும் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

V. தந்தையருக்கான மகப்பேறு விடுமுறையை பிள்ளை பிறந்து எவ்வளவு காலத்திற்குள் எடுக்க வேண்டும். (2 புள்ளிகள்)

5. நிலஅளவை உபகரணங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக கரிசனை எடுப்பது புல வேலைகளில் ஈடுபடும் ஒவ்வொருவரினதும் கடமையாகும். கீழ் வரும் சந்தர்ப்பங்களில் நிலஅளவைப் புல உதவியாளர்களின் கடமைகளை சுருக்கமாக விளக்குக.

I. ஒரு நாளின் வேலை முடிவின் போது உபகரணங்களை அதன் பெட்டிகளில் இடுவதற்கு முன் கவனத்தில் கொள்ளவேண்டிய காரணிகள் யாவை? (4 புள்ளிகள்)

II. தியோடலைட்டை அல்லது பூரணமாணியை ஒரு அளவை நிலையத்திலிருந்து இன்னொரு அளவை நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கு முன்னர் நீர் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணிகளை விபரிக்க. (6 புள்ளிகள்)

III. பூரணமானியை ஒரு அளவை நிலையத்திலிருந்து இன்னொரு அளவை நிலையத்திற்கு கொண்டு செல்லும் போது கையாளும் வழிமுறைகளை விளக்குக. (4 புள்ளிகள்)

IV. தியோடலைட்டை ஒரு அளவை நிலையத்திலிருந்து இன்னொரு அளவை நிலையத்திற்கு கொண்டு செல்லும் போது கையாளும் வழிமுறைகளை விளக்குக. (4 புள்ளிகள்)

V. செக்றோலில் 1 என்று சிவப்பு நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் விபரிக்கப்படுவது யாது? (2 புள்ளிகள்)